உ

சிவமயம்

தங்கத்தாத்தா நவாலியூர்

க. சோமசுந்தரப்புலவர் அவர்கள்

இயற்றிய



# தாலவிலாசம்

வெளியிடுவோர்:

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக அதிபர்

ரவலர்'', ''பூவுலக கற்பகதரு நாயகர்''

க. கனகராசா அவர்கள்

''திருஆலவாய்'' யாழ்ப்பாணம். 27–8–74

894-8111
சோமசு



உ
சிவமயம்

யாழ்ப்பாணத்து, நவாலியூர்,

க. சோமசுந்தரப்புலவர் அவர்கள்

இயற்றிய

# தால விலாசம்

வெளியிடுவோர்:

யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக அதிபர்

"சிவநெறிப்புரவலர்", "பூவுலக கற்பகதரு நாயகர்"

திரு. க. கனகராசா அவர்கள்

அச்சுப்பதிப்பு:

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.

DR. K. INDRAPALA

EVELYN RUTNAM LIBRARY ★ JAFFNA ★ 416

சிவமயம்

# முன்னுரை

ஈழத்துப் புலவர் பரம்பரையை இலங்கச் செய்த நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் பாடிய நூல்கள் பற்பலவாம். அவற்றுள், ஈழத்தின் சிறப்புக்களையும், வளங்களையும், பண்டை நாளில் ஈழத்தை ஆண்ட சிங்கள அரசரின் பெருமைகளையும், தமிழரசரின் பெருமைகளையும், தன்னரசு பெற்ற ஈழத்தின் ஆக்கங்களையும், தன்னரசுப் பேற்றையும் எடுத்துரைக்கும் நூல்கள் மூன்று. அவை யாவன இலங்கை வளம், தாலவிலாசம், மருதஞேட்டம் என்பனவாம்.

இவற்றுள்ளே தாலவிலாசம் என்பது பனையின் எண்ணூற்றுக்கு மேற்பட்ட பயன்களை அழகு பொருந்த எடுத்துரைக்கும் நூல். அது கலிவெண்பாட்டினுலும் கும்மிப்பாட்டினுலும் அமைந்தது. தாலம்—பனை, விலாசம்—விளக்கம், அழகு, விநோதம், எனப் பொருள் படுவது. பூலோக கற்பகதரு என்று எல்லாராலும் பாராட்டப் படுவது. இந்நாளில் இந்நூல் மிகப்பயன்படும். ஏனெனில்,

உணவின்றி வாடிவதங்கும் மக்களுக்குப் பிட்டுவகையென்றும், கூழ் வகையென்றும், பனாட்டு வகையென்றும் பல்வேறு வகைப்பட்ட உணவுகளைப் பாகஞ் செய்யும் முறைகளைப் புலவர் பெருமான் எடுத்துக் கூறுகின்றாராதலின் என்க.

பனையிலிருந்து பெறும் உணவுப் பொருள்களை இந்நாளிற் பாகஞ் செய்து உண்பார் தொகை அருகிவிட்டது. மேலைநாட்டுத் தின்பண்டங்களை அருவிலை கொடுத்து வாங்கி மிசைந்து பிணிகளைத் தேடிக்கொள்ளுகின்றோம். பனம்பண்டங்களை யுண்டாற் பிணியின்றி நீண்ட நாளுக்கு உயிர் வாழலாம். நூற்றைந்து, நூற்றுப் பத்து அகவைக்கும் உயிர் வாழ்ந்திருக்கும் தீவுப்புறத்துப் பெரு மக்கள், இளமை முதல் இப்பனம் பண்டங்களையே உண்டு வந்தவர்கள் என்று அறிந்து பெருமையும் வியப்பும் அடைகின்றோம்.

இவ்வரிய பனையைக் கடந்த பதினைந்தாண்டுகளாகக் கணக்கு வழக்கின்றித் தறித்து வருகின்றார்கள். ஒருவர் இறப்பதற்கு முன்பு இருபத்தைந்து பனைகளை உண்டாக்கி விடுதல் வேண்டும் என்று ஒருவாசகம் யாழ்ப்பாணத்தில் வழங்கி வந்ததை எமது பேரனார் கூறியதுண்டு. பனம்பண்டங்களே அவருடைய முதன்மையான உணவு. அவர் பிணியாதும் இன்றித் தொண்ணூறு ஆண்டு வரையில் உயிர் வாழ்ந்தார்.

பனம்பண்டங்களைத் தூய்மையாகப் பாகஞ் செய்து இந்நாள் இளைஞர்களுக்கு ஊட்டி வருதல் வேண்டும். பனங்கட்டி பனம் வெல்லம் பனங்கற்கண்டு என்பவற்றையும், பனாட்டுப் பாணிப் பனாட்டுத் தோற்பனாட்டுப் புழுக்கொடியல் என்பவற்றையும் இளைஞர்கள் விரும்பியுண்ணத்தக்கதாகப் பாகஞ் செய்தல் வேண்டும். ஒரு பனம்பொருட்காட்சியை இலங்கை அரசு உண்டாக்குதல் நல்ல முயற்சியாகும். அதனால் ஒரு விழிப்புணர்வு உண்டாகும்.

இனித் தாலவிலாசம் என்னும் இவ்வரிய நூலை இப்போது வெளியிடுபவர், மில்க்வைற் தொழிலக அதிபர், சிவநெறிப் புரவலர், சிவதரும வள்ளல், சிவதரும பூபதி, பூவுலக கற்பகதரு நாயகர் என்னும் அரும் பெரும் பட்டங்களைத் தாங்கி வரும் பெரு வள்ளல் க. கனகராசா என்பவரே ஆவர். இதுபோன்ற நூல்களை வெளியிடுதலினால் அவர்களைச் செந்தமிழ்க்காவலர் என்று கூறி நாம் பெருமையடைகின்றோம்.

சிவபுண்ணியஞ் செய்தலே தமக்கு எக்காலமும் இன்பமும் பயனுந் தரும் என்று கருதி, அதனையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர். அவருக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றது. அவர் புண்ணியம் வாழ்க. புகழ் பரக்க.

இந்நூலைச் சிலநாளில் மிக அழகுற அச்சிற் பதித்துத் தந்த சாந்தி அச்சக முதல்வர் திருவாளர் தி. நாகரத்தினம் அவர்களுக்கும் எங்கள் நன்றியுரியது.

திருச்சிற்றம்பலம்.

புலவர்புரம்,
21–8–1974.

சோ. இளமுருகனார்

INDRAPALA
OF
EVELYN RUT
LIBRARY
JAFFNA

# பதிப்புரை

நாம் பிறந்த நாள் தொடக்கம் இறக்கும் வரை எமக்கு 800 வகைகளில் பனை பயன் தருகின்றது என்று பெர்கூசன் என்பார் எழுதியுள்ளார். பனை ஆயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாக வாழ்ந்தும் கெட்டும் பயன் தருகிறது. பனையைப் பற்றிப் பழந்தமிழ் புலவர்கள் பலவிதமாகப் பாடிப் போற்றியுள்ளார்கள். மூவேந்தருள் ஒருவராகிய சேரர் பனையைத் தங்கள் சின்னமாகக் கொண்டனர்.

பனங்காய் நிலத்தில் முளை கொண்டு வடலியானதும் பயன்படத் தொடங்குகிறது. ஓலைகள் பருத்து கங்குகள் உண்டானதும் மேலும் பலவிதமாகப் பயன்படுகிறது. வடலியோலையிலிருந்து முற்றிய காவோலை வரையுள்ள பனையோலையின் உபயோகங்கள் மிகப் பல. அவற்றைத் தடுக்கு, பாய், கடகம், பெட்டி, சுளகு, உறி, விசிறி, கூடை என விதம் விதமாகக் கூறலாம். பனையோலை காகிதம் செய்யவும், வீடு வேயவும், வேலியடைக்கவும், மாடுகளுக்கு உணவாகவும், பசளையாகவும் பயன்படுகிறது. காகிதம் கண்டுபிடிக்கப்படுமுன் பழைய நூல்கள் யாவும் ஏட்டிலேயே எழுதிப்போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்தன.

பனை காய்க்கத் தொடங்கியதும் பதநீராகவும், நுங்காகவும், பனங்காயாகவும் பயன்தருகிறது. கள்ளின் உபயோகத்திலும் பார்க்க அது கருப்ப நீராகவே பயன்படவேண்டியது. பதநீரைப் பதப்படுத்தி இரசாயன முறைகளில் பனங்கட்டியாகவும், பனம் வெல்லமாகவும், பனங்கற்கண்டாகவும், கல்லாக்காரமாகவும் செய்யலாம். இவை யாவும் உயிர்ச்சத்து மிகுந்த உணவுப் பண்டங்களாகும்.

பனம் பழத்தையே நாம் பனங்காய் என்கிறோம். உயிர்ச்சத்து நிறைந்துள்ள அதன் களி பலவிதமாகப் பயன்படும். வெறுமனே உண்ணவும் பலகாரஞ் செய்துண்ணவும் பனாட்டுச் செய்துண்ணவும் அது உபயோகமாகிறது. பனாட்டுடன் பனம் பாணி, மிளகு, சீரகம் முதலியன கலந்து பாணிப்பனாட்டுத் தயாரிப்பர். பாணிப்பனாட்டு நீண்டகாலம் பழுதுபடாமல் இருக்கும். உடம்பின் உள்ளூறுப்புக்களுக்குச் சிறந்த உணவும் ஔடதமுமாகும். பனங்களியிலிருந்து ஜாம் எனப்படும் பழப்பாணியும் செய்கிறார்கள். இன்னும் சிறுவர் விரும்பும் இனிப்புப் பண்டங்களும் செய்கிறார்கள்.

பனம் மட்டையும் கங்கும் பலவிதமாகப் பயன்தருகின்றன. அவற்றை அடித்து உரித்துத் தும்பு நார் முதலியன எடுக்கிறார்கள்.


நவீன யந்திரங்களைக் கொண்டு மிக நுண்ணிய தும்புகள் தயாரிக்கிறார்கள். இவற்றைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை வளம்படுத்துகிறார்கள். அன்றி இதில் உண்டாகும் கழிவுப் பொருள்களை மிகச்சிறந்த பசளை எனக்கண்டுள்ளார்கள்.

நாம் செய்ய வேண்டிய பணிகளில் பிரதானமானது பனையைப் பேணுதல். எக்காரணங்கொண்டும் பெண் பனையைத் தறிக்கலாகாது. பனம்பழக் காலத்தில் வசதியுள்ள இடங்களிலும் வயலோரங்களிலும் வழியோரங்களிலும் பனையுற்பத்தி செய்தல் வேண்டும். மழைக் காலத்தில் பனையடியில் நீர் நிற்குமாறு வெள்ளத்தைத் தடுத்துக்கட்டி வளஞ்செய்தல் வேண்டும். பனையைப் பாதுகாத்து நம்மைப் பாதுகாத்து நாட்டுக்கு நன்மை செய்வோமாக.

இங்ஙனம்

க. கனகராசா
(மில்க்வைற் தொழிலக அதிபர்)

''திருஆலவாய்''
யாழ்ப்பாணம்.
23-8-74.



மில்க்வைற் தொழிலக அதிபர்

''சிவநெறிப்புரவலர்'', ''பூவுலக கற்பகதரு நாயகர்''

திரு. க. கனகராசா அவர்கள்

திருச்சிற்றம்பலம்

# தாலவிலாசம்

## காப்பு

மன்னுநீர் ஞாலத்து வான்பனையின் மேன்மையெலாம்
பன்னுகலி வெண்பாவாற் பாடவே — முன்னர்வரு
போதனே விக்கினங்கள் போக்குகின்ற பூதகண
நாதனே முன்னே நட

## நூல்

ஓங்கார மூலத் தொருவனிரு தாடொழுது
பாங்கார் தமிழ்க்கலிவெண் பாட்டினல் — வீங்குபுகழ்த்
தால விலாசந் தனையுரைப்பேன் தெண்டிரைசூழ்
ஞால முணர்க நயந்து

## பனை பூமியில் உண்டான வரலாறு

சீர்பூத்த செங்கமலத் தேவியே தேசுமலி
வார்பூத்த கொங்கை மடமயிலே — பார்பூத்த
கற்பகமே யன்ன கடவுட் பனையருளு
நற்பயன்கள் நான்கிரட்டி நாற்றென்று — மற்றவற்றை
வேறுவே றாகப் பிரித்து விரித்தெடுத்துக்
கூறமுடி யாது குவலயத்தில் — நாறுமலர்ப்
பூவா ழயன்படைத்த போகப் பொருள்களுள்ளே
ஓவாப் பசியை யொழிப்பதற்கு — மேவுமனைத்
தட்டுமுட்டுக் கூட்டுதற்குந் தாவுபிணி யோட்டுதற்கு
முட்டெளிவி லார்க்குமுண வூட்டுதற்கு — முட்டாது
தந்துதவ வல்ல தனிப்பொருளொன் றின்மையினல்
இந்த வுலகத் தவரிரங்கிக் — கந்தமலர்
முட்டாண் முளரி முழுநீலப் பாசடைமே
லொட்டாப் புனல்போ லுளமறுகி — யெட்டாகி
யொன்று யிரண்டா யுலகா யுடனகி

யன்றாகி நின்ற வரனடிகள் — நன்றாகப்
பூசைமுடித் தெம்மையாள் புண்ணியனே யெங்களுள்ளத்
தாசை முடிய வருளென்றே — நேசமுடன்
வேண்டி வரங்கிடப்ப வேண்டியவெல் லாமீயு
மாண்டகையு முள்ளத் தருள்சுரந்து — நீண்டபுவி
காக்குந் திருமாலை யுள்ளக் கசப்புடனே
நோக்கிநீ யிவ்வுயிர்கள் நோவாது — காக்கும்
வினையிற் றவறும் விதமென்கொ லென்னப்
புனைமலர்க் கைகட்டி வாய்பொத்தி — வினயமுடன்
என்றன் றொழிலி லிறையுங் குறையில்லை
மன்றன் மலரோன் வகுத்தவற்று — ளொன்றாகி
மாந்தர் மனக்குறையை மாற்றும் பொருளில்லை
யேந்தலே யென்றுநெடு மாலிசைக்கக் — கூர்ந்தயனைக்
கண்சிவந்து நோக்கியென்ன காரியஞ்செய் தாயென்று
பெண்சுமந்த மேனிப் பிரான்வினவ — வெண்சுமந்த
நாற்றலையா னற்ற நடுநடுங்கி நாக்குளறி

வேர்த்துப் பணிந்து விளம்புவான் — ஏற்றுகைக்கும்
அண்டர் பிரானே யடியே னறிந்தவற்றை
யுண்டுபண்ணி வைத்தே னுலகிலெவ — வண்டங்
கருவுயிர்க்கு மங்கயற் கண்ணிசின மாற்றி
இருவரிலுங் குற்றமில்லை யென்னக் — கருணைமிகு
மெம்பெருமா னுறி யிருந்து பிரமனைக்கூஉய்
அம்புவியின் மாந்த ரனுரகல — வும்பருறுங்
கற்பகத்தை யிப்பொழுதே யாக்கக் கடவையெனப்
பொற்பதுமத் தானு முளம்புரிந்தே — யற்புதஞ்சேர்
புற்பதி தாலம் புகழ்பெண்ணை பொந்தியெனப்
பற்பல கூறும் பனைமரத்தை — யிப்புவியி
லான்ற பனையூ ரழகார் பனங்காட்டூர்
ஏன்ற பனந்தரையூ ரென்றுரைக்கு — மூன்றுபெருந்
தேயங் களிற்படைத்தான் தெய்வப் பனையுலகுக்
கீயும் பொருளு மிசைபயனு — மாயிழையே

யானறிந்த வண்ண மெடுத்துத் தொடுத்தியம்பத்
தானமர்ந்து கேட்டுட் டரித்திடுவாய் — மாநிலத்திற்

### பனை உண்டாக்கும் வகை.

கொத்திவெட்டி வேலிகட்டிக் கொட்டையெழு சாணொன்
பத்திபத்தி யாகப் பதித்திடுகில் — வைத்தவிதை [ருய்ப்
பாவாய் முளைகிளம்பிப் பாம்பா டிடும்பருவத்
தாவா டெருமைதின்று தேவளர்த்தா — லோவிலருள்
முப்பாசந் தீர்த்த முனிவர்மொழி வாய்மைபோ
லெப்போது நின்றுபய னீயுமே — தப்பா
வலியொன்றி யோங்கி வடலியாய்ப் பொல்லாக்
கலிகொன்று காமர் குடைக்கீழ்ப் — பொலியும்
உருக்குவாள் வேந்தன்போ லோரிருசாற் கூருங்
கருக்குவாள் கொண்டுலகைக் காக்கு — நெருக்கிருவில்
தங்குமட்டாய் நீண்டு சருகா யதிற்செறிந்த

## கங்குமட்டை.

கங்குமட்டை தானே கழன்றுதிரு — மங்கொருவர்க்
கீயான் கரம்போ லிறுகு மிளவடலி
காயாத கங்குமட்டைத் தும்பினுல் — மேய
துடைப்ப முதலாகச் சொல்லுபொருள் செய்வர்
அடுப்பெரிக்கக் காய்ந்தமட்டை யாகு — மடுத்துவரும்
பன்னுடை தீயெளிதாய்ப் பற்றுபொரு ளாங்களுத்
தன்னை வடித்திடவுந் தானுதவு — மன்னுலகிற்
பெண்பிள்ளையுந் தண்பனையும் பேணிவளர்த் தால்வருடம்
பண்பிலொரு பத்திற் பயன்கொடுக்குந் — தண்பனைகள்

## பாளை

கார்த்திகை மார்கழியிற் காகதுண்டம் போற்பாளை
சேர்த்தொதுக்கி வைத்த திரவியம்போல் — வாய்த்த
மகரமதி மாசி மதியில் வெளியாப்

## குரும்பை

பசுரு மிளங்குரும்பை பற்றும் — புகுதிவினை
பம்பு மவமிருத்தாற் பைங்குழவி சாவதுபோல்
வெம்பு குரும்பைசில வீழுமெடுத் — தம்புவியி
லாவின் பசிதீர வன்பா யரிந்துவைத்தாற்
பாவம்போ மாவினமும் பால்சுரக்கு — மேவுங்

## நுங்கு

குரும்பையது முற்றிக் குடிக்குநுங் காங்கால்
விரும்பிவெட்டி மேன்முகிழை நீக்கி — யரிந்துகட்டை
சுட்டு விரல்களினாற் றோண்டி யுறுஞ்சியுண்ணக்
கட்டிகனி பாகுசுவை காணுவா — மிட்டமுட
னுங்கமுதங் கண்டா லுடனொந்து வானவர்கள்
அங்கமுத முங்கடைய மாட்டார்கள் — நுங்குணவு
வேர்க்குருவைத் தாகத்தை மேவும் பசியதனைத்
தீர்க்குமே சீதக் கழிச்சலையும் — ஏற்கும்

### பணுவில்.

பணுவிலென்று நாட்டில் வழங்கும் பனங்காய்
அணியு முடைத்தமுகி ழாங்கே — பணிவாகக்
கஞ்சியுங் கூழுங் கரைத்த பழஞ்சோறுங்
கொஞ்சியுண்ணும் பாத்திரமாய்க் கூடுமே — யெஞ்சாக்
குறியெதிர்ப்பை யுப்பளந்து கொள்வருடை யாத
திருகுமுகிழ் தீயெரிக்கச் சேரு — மருவுகாய்

### சார்வாய்.

நீங்கிப் பழுக்கு நிலையிற் சிலபழத்தை
வாங்கி வெயின்முகத்து வாடவைத்துப் — பாங்காகக்
கோலுந் தசையரிந்து கூறுபழந் தேங்காயின்
பாலும் பருப்புங் கலந்தவித்துச் — சாலவே
நீர்வா யொழுக நினைவாகத் தேடியுண்ணுஞ்
சார்வா யுணவென்று தாணுண்பர் — சீராகக்

## பழம்.

காய்முற்றி நன்ருய்க் கனிந்து பரிமளித்து
வேய்முற்று தோளி விழுமெடுத்துத் — தீமுற்றுஞ்
செந்தழலி லப்பழத்தைத் திட்டமுடன் சுட்டெடுத்துச்
சந்தநீ ரிற்கழுவித் தோல்தள்ளி — வந்திருந்து
கையாற் பிசைந்து கறந்துகுடிப் பாரதற்குச்
செய்தேன் திரட்சிப்பால் சீனியொவ்வா — செய்துவைத்த
காடிபுளி நீர்தெளித்துக் காதலுட னுண்பதுவு
நாடி யுரைப்பர் நலமென்றே — தேடிக்

## பணிகாரம்.

கறந்தெடுத்த நல்லபனங் காய்க்களியைக் காய்ச்சிச்
சிறந்தமா சீனியுடன் சேர்த்து — நிறந்திகழும்
எண்ணெயில் நெய்யி லியைந்ததொன்றி லேயிட்டுப்
பண்ணிகாரஞ் சுட்டுப் பாத்துண்பார் — திண்ணமாய்
அல்லற் பசிக்கு மரும்பிணிக்கு மாரமுதாஞ்

## பணுட்டு.

செல்வப் பணுட்டின் திறமுரைப்பேன் — மெல்லியலே
சுத்தத் தலத்திற் ருெடையுயரப் பந்தரிட்டு
மெத்தச் சுசியாய் மெழுகியே — யத்திமுகத்
தைங்கரனைப் பூசனைசெய் தையா பனைப்படைப்பை
யிங்கிதமாய்க் காப்பா யெனத்தொழுது — பங்கமின்றி
வெட்டிப் பழுத்தகனி வீழ்கனிக ளைக்கழுவித்
தட்டி நெகிழ்த்துரித்துத் தானடுக்கி — வட்டக்
கடகங் களிலிட்டுக் காடிவடித் தூற்றித்
திடமாகச் சேர்த்துப் பிசைந்து — கொடுமிடிமை
துன்று நலத்தைத் துருவி யுறப்பதுபோல்
ஒன்று களியை யுறந்தெடுத்து -- நன்ருகப்
பின்னுமொரு கால்வேறு பெட்டியிலிட் டுப்பிசைந்து
மன்னுங் களிபிழிந்து வார்த்தொன்ருய்ச் — சொன்னபடி
கிஞ்ஞாச் செடியின் கிளைக்கூட்டி ஞற்றுழவி
யெஞ்சாது குந்தை யெடுத்தெறிந்து — செஞ்செவே

முன்னஞ்செய் பந்தர் முழுமா றிரண்டுடைய
பன்னஞ்செய் பாய்மேற் பரவியே — நன்னயமாய்
மாலை மடித்து வழிநாட் சுடர்தோன்றுங்
காலை விரித்துக் களிபரவி — மேலேவித
மெட்டு நாளெட்டுக் களிவிட் டிறுகியிறை
மட்டதா கத்தடித்து வந்ததற்பின் — னிட்டமுடன்

## கூடையில் அடைத்தல்.

உப்புப் பிரண்டையிரண் டொக்கவதன் மேற்றூவித்
தப்பாமற் சாணுக்குச் சாண்கீறிச் — செப்பமிலாப்
புல்லர்பா லிச்சகம் பேசிப் பொருள்பெறல்போல்
மெல்லமெல்லப் பாயிதழை வெட்டாமல் — நல்லகூர்த்
தட்டகப்பை யாற்புல்லுச் சத்தகத்தாற் றண்ணீரிற்
றுட்டெடுத்துச் சூரிய வெப்பத்தில் — வட்டக்
குடிலின்மேற் காயவைத்துக் கொண்டவிதழ் போக்கி
வடிவாக நூல்போல் மடித்து — மிடிபோகப்

பின்னுக வுண்பதற்குப் பெய்துபொத்திக் கூடைதனிற்
பொன்னுக வேபரணிற் போற்றிவைப்பார்—மின்னுசுடர்

## பாணிப்பனுட்டு. — 1

மாணிழையாய் செல்வர் மனமாக வுண்கின்ற
பாணிப் பனுட்டின் பரிசுரைப்பேன் — பேணுபனங்
கட்டியு நெய்யுங் கலந்துகளி பாதியிறை
மட்டுந் தடித்திறுக வார்த்ததற்பின் — கெட்டியாய்
முன்போ லெடுத்து மடித்துமுடை கூடையிலிட்
டன்பாக வுண்ப ரதுநிற்கப் — பின்புமொரு

## பாணிப்பனுட்டு. — 2

பாக முரைத்திடுவேன் பக்குவமாய்க் கேள்சிறுதுண்
டாகப் பனுட்டை யரிந்துகொண்டு — வேகவறுத்
திட்டிடித்த வெள்ளு மிளகரிசி சீரகமும்
அட்டெடுத்த பாணி யுடனளவி — முட்டியிலே
பெய்துவைத்துப் பின்பு பெருவிருந்தா யுண்பார்கள்

## தோற்பனாட்டு.

செய்தோற் பனாட்டின் திறமுரைப்பே — னெய்தும்
அமலிபோய் மாறி யருந்தலாய் வீழுங்
கமழுங் கனியின் களியை — யமைவுபெற
மூன்றிரண்டு நாள்வார்த்து முற்றாகக் காய்ந்ததற்பின்
ஏன்றதாள் போல வுரித்தெடுத்துத் — தோன்றுஞ்
சுருளாக்கிப் பச்சடியுந் தொட்டுண்பர் மேலும்

## படைப்பு.

அருளாரு மைங்கரனை யுன்னி — மருவொடியல்
மாப்பிட்டு வாழை வருக்கைதே மாங்கனிகள்
வாய்ப்புற்ற புத்தமுதும் வைத்தேத்திக் — காப்பிட்டால்
வைத்த பனாட்டின் மருவு முழுப்புமுதல்
எத்தனையு மூன மியையாவாம் — வைத்தெடுத்து

## பஞட்டின் நன்மைகள்.

மாரிக்கா லத்தின் மருவுமுண வோடுண்ண
வீரியமாய் நோய்கள் விலகுவகேள் — சேரு
மலச்சிக்கல் போக்கு வயிற்றுளைவு மீன்முட்
குடர்ச்சிக்கல் கூட்டோடு போக்கு — நிலத்திலே

## பாத்தி போடுதல்.

தின்ற பனங்கொட்டை சேர்த்துப் பிசைந்தகொட்டை
ஒன்று கருக்குப் பொறுக்குக் கொட்டை —யென்றென்று
கொத்தாக நாலான கூறுகக் கூறுகின்ற
வித்தை யெடுத்துவெவ் வேறுகப் — பத்தியாய்
நாலைந்தா றெட்டடுக்கு நன்றுக வேயடுக்கி
மேலேமண் ணிட்டருகு மேவியே — சால
வெயிலெறிக்கு மாவணிக்கு மேவுபுரட்டாதி
யிருமதிக்கு நீரிறைத்து விட்டாற் — பருவத்திற்
கையில் விரல்போலும் காளான் முளைபோலும்
பையக்கீழ் நோக்கிப் பயிராக்குந் — தைமாசி

## கிழங்கு.

மாதங் களிற்கிழங்காம் மப்புமழை யில்லாத
தீதற்ற நல்ல திருநாளி — லோதும்
அருகக் கடவு ளடியார் தலைபோல்
மருவு மயிர்முழுது மற்ற — கருவூமல்
தன்னை வடுகன் சதுர்முகனைச் செய்ததுபோல்
முன்னம் பறித்து முடித்ததற்பின் — அன்னமே
கிண்டி யெடுத்துக் கிழங்கின்மேற் றோலுரித்துக்
கொண்டுதலை சீவிக் குறிப்பாக — நன்றவற்றைப்
பப்பாதி யாய்க்கிழித்துப் பற்றுநுனி வாலொடித்துத்
தப்பாது வெய்யிலிலே தான்பரவி — யப்பாலும்
வான்முறித்து வார்ந்து மறுவின்றி நன்ருகப்
பானிறத்துக் காய்ச்சிப் பதமாக்கித் — தானத்
துமலிலிட்டுப் பொத்தியொடியலென வைப்பர்
எமதுதன மிஃதென்றே யெண்ணி — நவைதீர்

பிட்டு. — 1

ஒடியறனிற் செயு முணவுவகை கேளாய்
துடியனுக்கு மென்மருங்கிற் றேகா — யொடியறனை
வல்லுரலி விட்டிடித்து மாவாக்கி மற்றதனைத்
தெள்ளிநீர் விட்டுத் தெளித்தூற்றி — மெள்ளவே
சீலையி லிட்டுத் திருகிப் பிழிந்துதறி
வாலிய வுப்புநீர் வார்த்தளவி — மேலுங்கேள்
வாய்ப்பான கீரைசுளை மாறன் கொடிப்பொடியுஞ்
சேர்ப்பார்கள் சேர்த்துத் திரட்டியே — பூப்பரவு
மன்னர் முடிபோல் வனைந்தநீற் றுப்பெட்டி
தன்னிலிட்டு வேகவைத்துத் தானுண்ப — ரன்னதுதான்
ஈட்டுபொரு ளில்லாத வேளைகட்கு நல்லுணவாம்
வாட்டு பசிநீக்கும் வன்மைதரு — மீட்டுமொன்று

பிட்டு. — 2

பன்னுமா தேங்காயின் பாலுப்பு நீலநிற
மன்னுமால் பத்து வடிவிலொன்றுஞ் — சொன்னபடி

சேர்த்துமுன் போலவித்துத் தின்னலாம் யாவர்க்கும்
நேர்த்தி யுணவு நிறைவலியாம் — நேர்த்தியாய்

பிட்டு.—3

வார்ந்த நடுவொடியல் மன்னுசலத் தூறவைத்துக்
காய்ந்த பிறகு கடுகவிடித் — தாய்ந்தரித்துத்
தெள்ளி யெடுத்த திகழிடியுந் தேங்காயிற்
கொள்ளு நறிய கொழும்பாலுந் — தள்ளரிய
உப்புநீர் கீரை யுரைத்தபழ மும்பிறவுந்
தப்பாமற் சேர்த்தவித்துத் தாணிறக்கி — யெப்பொழுதும்
ஆவினறு நெய்யு மளவி யருந்திடலாம்
நாவி னுருசிமிக நன்றாகும் — ஆவலுடன்

பிட்டு.—4

செப்புவேன் வேறுமொன்று தேங்காய்த் துருவல்மிள
குப்பரிசி மாமிளகாய் சீரகமுந் — தப்பாமற்
கூட்டி யவித்தபிட்டுக் கூறுபல நாட்செலினும்

வாட்டமின்றி வைத்து வழங்கலாம் — நாட்டுநறு
நெய்யைத் தயிரை நிறைபாலைச் சேர்த்துண்ணில்
மெய்யிளைப்பு நீங்கும் விறலுமுண்டாம் — வையத்து
வாழு மவரொடியல் மாவினுற் செய்கின்ற

கூழ்.—1

கூழின் வகைகள்சில கூறுவேன் — நீளுலையில்
நீர்வார்த்து நெல்லரிசி நொய்புலவு மிட்டவித்துக்
கூரும் புளிமிளகாய் கூட்டியே — யோரளவாய்
மாவைக் கரைத்ததனில் வார்த்தகப்பை யாற்றுளவி
மேவும் பதங்கண்டு விட்டிறக்கி — யாவலுடன்
உண்ணவுண் ணத்தெவிட்டா துண்ணலாம் வேண்டுமேல்
வண்ணப் பழங்களொடு மாந்தலாம் — இன்னுமொன்று

கூழ்.—2

செந்நெல் லரிசி சிறுபுலவு காரையிலை
பன்னு பலாக்காய்ப் பருஉச்சுளைகள் — இன்னும்

வறுத்த பயறுமுந்து கீரைவகை யிட்டுக்
குறித்த புளிமிளகாய் கூட்டிப் — பொருத்தமா
யுப்பிட்டு மாவைக் கரைத்தூற்றி முன்போலச்
செப்பு சுவைபாகந் தெரிந்திறக்கி — யெப்பொழுதும்
ஓதும் பனங்காய் முகிழிற் பலாவிலையில்
ஆதரவாய்ச் சூடாற வூதியே — பூதலத்தில்
ஏவரு முண்ண விளகு மலம்பசிக்கும்
மேவும் பலகிருமி வீடுமே — பூவையே

### சுட்ட கிழங்கு

கிண்டியெடுத்த கிழங்கிற் சிலவற்றை
மண்டு நெருப்பிலிட்டு வாட்டியே — நன்றாக
இட்டமிள குப்புள்ளி யேற்றமிள காயரைத்துத்
தொட்டுத் தொட்டுண்ணச் சுவைகூரும் — மற்றதனை
மாலையிற் சுட்டு மனைக்கூரை மேலிட்டுக்
காலையெடுத் துண்ணக் கடுப்பகலுங் — கோலமலர்ப்

## புழுக்கொடியல்.—1

பூங்குழலாய் கேளாய் கிழங்குபுழுக் கிக்கிழித்துப்
பாங்காகக் காயவிட்டுப் பக்குவமா — யாங்கதனைத்
தேங்காயின் சொட்டுடனே சேர்த்துக் கடித்துண்பர்

## புழுக்கொடியல்.—2

ஓங்கிய பல்லுள்ளோ ருறுகிழவர் — தேங்காய்த்
துருவலுடன் சர்க்கரையுங் கூட்டியிடித் துண்பர்
மருவுபல காரமும்மரைத் துண்பர் — பிரியமாய்
வித்து முளைத்து வெளிவரும்போ தம்முளையைத்

## முளைக்கறி.

துய்க்கலாம் மற்றதனைத் தூய்தாக்கி — வைக்குங்
கறியாய்க் குழம்பாகக் காய்ச்சியுண்ண வின்பம்
செறியுமதற் கில்லையொப்புச் செப்ப — மறுவின்றிச்

### பூரான்.

சீராய் முளைத்தபனங் கொட்டைதனைச் சுட்டுவெட்டிப்
பூரானை யுண்பரது புத்தமுதாம் — ஆரெரியில்
வேகவையா துண்ணலாம் வேண்டுநறும் பிட்டுக்கும்

### ஊமல்.

ஆகு முலர்ந்த கொட்டை யூமலாம் — பாகமாய்ப்
புல்லுநெருப் பிட்டுப் புறமகற்றிப் பொன்னிருப்புக்
கொல்லருக்குத் தூராக் குணக்கரியாம் — செல்வருக்கு
மூக்கிடுதூள் வைக்க மொழியு மருத்துவர்கட்
காக்குங் குளிகை யடைத்துவைக்கத் — தாக்கியே
பஞ்சுவைத்துச் சக்கிமுக்கி யால்நெருப்புப் பண்ணுதற்கு
மஞ்சிகையு மாகு மதுரமொழி — வஞ்சியே

### கள்ளு.

ஏழைகட்குஞ் செல்வருக்கு மேற்ற பனைமரத்திற்
பாளைவருங் காற்பருவம் பார்த்ததனைத் — தாழா

திடுக்குத் தடிகொண் டிடுக்கிப் பிடியால்
அடித்து நுனியை யரிந்து — மடக்கியே
முட்டிவாய் வைத்து முடிந்துவிடின் மெல்லவே
மட்டுலாங் கள்ளூறி வந்திருக்கும் — இட்டமுடன்
வாமமதத் தாரதனை வாமிக்கு வைத்துண்டு
காமியம் வேண்டிக் களிப்பார்கள் — ஏமமிகு
கள்ளைக் குடித்துக் களியாடல் நல்லறிஞர்
எள்ளி விடுத்த விழிதொழிலாம் — உள்ளறிவைப்
போக்குங்கள் ளுண்ணிற் பொருந்து முடல்வலிமை
நீக்குஞ் சிரங்குமுத னேர்பிணிகள் — ஆக்குகின்ற

## ஏரா.

ஏரா முறையை யியம்புகிறேன் நீயதனை
நேராகக் கேட்டிடுவாய் நேரிழையே — சேரும்
அரபொடியூ சிக்காந்த மாங்கீச்சுக் கிட்டம்
உரமுடனே முட்டியிலிட் டூற — மருவுதினம்

ஏழுமுடன் சென்று லிறக்கியதி காலையுண்ண
ஈழைகா மாலையிவை யேகுங்காண் — பாளைதனிற்

### கருப்ப நீர்.

சுண்ணமிட்ட முட்டிகட்டித் தூக்கியெடுக் கும்பதனீர்
நண்ணுபசி தாக நலிக்குங்காண் — பெண்ணணங்கே
சோம்பல் திமிரகலுஞ் சூடுடம்பை விட்டேகும்
ஆம்பலமுந் தண்ணென் றகங்குளிரும் — ஆம்பிரத்தின்
காய்சீவி யிட்டுக் கருப்பனீர் காசினியோர்
வாயுருசி யாகவே மாந்திடுவர் — தூய
பயறிட்டுக் காய்ச்சிப் பருகுதலு முண்டு
நயமாகு நன்மிளகிட் டுண்ணச் — செயிர்தீர்

### கற்கண்டு.

கருப்பநீ ரைச்சுண்டக் காய்ச்சிவேப் பெண்ணெய்
உருப்போலு மோர்பதத்தி லுற்றால் — விருப்புடனே

ஓதுபுது முட்டியன்றி யோலைக்குட் டானிவற்றிற்
றீதகல விட்டுவைத்துச் செம்மியே — ஆதரவாய்ப்
பூவிற் புதைத்தெனினும் பொங்குபுகை யிட்டெனினுஞ்
சேமித்து வைக்கிற் றினவடையிற் — றூமலியுங்
கற்கண்டாம் மற்றிதனைக் கைக்கொண்டு வாய்க்கொண்
[டால்
மற்கொண்ட வீழைசளி மாறுங்காண் — விற்கொண்ட

## பனை வெல்லம்.

வாணுதலாய் கேட்டி மருவும் பனைவெல்லங்
காணும் வகையுங் கழறுவேன் — பாணிதனை
இன்னும் நெருப்பிட் டெரிக்கவிறு கிக்குமிழி
கொள்ளுமொட்டு மப்பதத்திற் கொண்டிறக்கிற் —சொல்லு
[கின்ற
வெல்லமா மேலு மெரித்து வியனகப்பை

RUTNAM LIBRARY
416

## பனங்கட்டி.

புல்ல முறியுமப் போதிறக்கி — மெல்லவே
முட்டியி லோலை முடையுங்குட் டானிலிடக்
கட்டியா மோதுபனங் கட்டியாந் — திட்டமாய்

## கருப்ப நீர்ப் பொடி.

எள்ளு மிளகு மெழிற்சி ரகப்பொடியுங்
கொள்ளுமந்தப் பாணியுடன் கூட்டியே — மெள்ள
இறுகத் துழாவி யெரிக்க வெரிக்கச்
சிறுநுண் பொடியாகச் சேரும் — பெறுமதனை
உண்ணக் கொடுந்தாக மோடிவிடு மாண்பனையிற்
பண்ணுமது வாறுற் பலநோய்போம் — உண்ண
இதந்தா யிலாக்குழவிக் கேற்றவுண வாகும்
பதந்தவறிற் கட்டி படுமாம் — மதந்தரும்
வஞ்சமதுப் பங்குனியாம் மாதத் தொடுதொலைய

அஞ்சுமா தங்கட் கதன் பழமா — மெஞ்சிய
திங்களுக்குச் செல்வப் பணுட்டாகுஞ் சிருணவு
மங்காப் பனையியு மாண்டு முற்றுந் — தங்குபுகழ்ப்
பாரிபோல் யார்க்கும் பயனருளித் தன்னையுமே
நேருங் கொடையாக நின்றுதவுஞ் — சீரியநற்
கற்பக மன்ன கடவுட் பனையுணவை
அற்புடனே யெந்நாளு மாதரித்தால் — முப்பொழுதும்
உண்ணவொரு நாளுக் கொருபொழுதுண் டேநோற்கும்
அன்னவர்போல் நல்லபய னங்கடைவார் — மன்னுபனை

பனை யோலை.

யோலைதனை யொன்றுவிட் டோர்வருடம் வெட்டிவெயில்
மேலுலர விட்டு மிதித்தடுக்கிச் — சாலவும்
வேலி யடைக்கலாம் வீடுகளும் வேயலாம்
கோலக் குடில்கட்டிக் கொள்ளலாம் — மேலுந்தான்
வாரி விளையா வயற்கெருவாய்ப் போட்டுவிட்டால்
வீரியமாய்ச் செந்நெல் விளையுங்காண் — சேருமட்டை

## நார்.

கொள்ளுமிரு பாற்கருக்கும் சீவிக் குலவியநா
ருளளும் புறமு முரித்தெடுப்பா — ருண்ணூரால்
வேலிகட்ட வுங்கயிறு வெவ்வேறு பின்னவுங்கோ
பாலர்தயிர் முட்டியுறி பண்ணவுமா — மேலுங்கேள்
மட்டை விறகாம் வரிச்சாஞ் சுவடிகட்குக்
கட்டி யிறுக்குங் கடைகாப்பாந் — துட்டர்
எலிப்பிடிக்க வேற்று மிடாராகு நெய்ய
வலிப்புடைய பாவாற்றி யாகும் — பலிப்பான

## பன்னவகை.

வன்னக் குருத்தில் வடிவாகச் செய்கின்ற
பன்னவகை யின்னவெனப் பன்னரிதா — லன்னவை
புத்தகப் பெட்டி புகல்கட்டுப் பெட்டிபல
வித்தகப் பெட்டி மிகுகுட்டான் — வைத்த
கடகம் பத்தாயங் கதிர்ப்பாய் கிடைபாய்

திடமா முமலளவு சேர்கள் — கடவுட்டிரு
நீறிடுங் குட்டான்கள் நீரிறைக்கும் பட்டைவகை
கூறுபல வுஞ்செய்து கொள்ளலா — மாறங்க
வேதநூ லாகமநூல் வேறுமுள மெய்க்கலைகள்
போத மிகுந்த புராணநூ — லோதுகின்ற
மந்திரநூல் சிற்பநூல் வாகடநூல் வாய்மைமிகு
செந்தமிழ்நூல் பற்பலவுந் தீட்டலாஞ் — சுந்தரஞ்சேர்
மங்கல நாளோலை மங்கையர்க்குக் காதோலை
துங்கமிகு நண்பருக்குத் தூதோலை — தங்குபல
பற்று வரவு பதியுங் கணக்கோலை
மற்று முறுதி வரையோலை — கற்றவர்கள்
எந்திரங்கள் கீறி யெழுத்தடைத்துக் கட்டுகின்ற
மந்திர வோலைகட்கு வாய்ப்பாகும் — பைந்தொடியே
சீராங் குருத்தைத் திகழ்வட்ட மாயரிந்து
நாராசங் கோத்திறுக்க நற்பொல்லாஞ் — சேரும்
வியர்வைகளை நீக்கும் விசிறியாம் வெய்யிற்
புயன்மழையும் போக்குங் குடையாம் — வயன்மேவு

மள்ளர் தலைக்கணியும் வள்ளத் தலைப்பாவாம்
பிள்ளைவிளை யாடுபொருட் பேதமாங் — கொள்ளுஞ்
சுரையுண் பிழாவுமாஞ் சோறுண் கலமாம்
நிரையூணு மாகவே நேர்வ — ருரையோலை
ஈர்க்கினுறி யீர்வாணி யேற்றசட்டி பானைகளைச்
சேர்க்குமணை தட்டுமுறஞ் செய்யலாம் — ஆக்குபெயர்

### பனைப் பெயர்.

காகக் கருப்பை கருங்குந்தி செங்குந்தி
மாக மளவும் வளர்நெடுமி — ஆகவுங்
கட்டைச்சி பூமணத்தி கங்கிநுங்கி யோர்நாலு
கொட்டைச்சி யென்றனந்தங் கூறுவர் — இட்டமுடன்

### வேறுபயன்.

தாவும் பனங்குருத்தைத் தாரணியோர் நல்லதென
ஆவலுட னுண்டிடுவா ராரணங்கே — மேவுமரம்
இல்லங்கள் கோல விசையுமறச் சாலைசெய

நல்லமடம் பூம்பந்தர் நாட்டிவைக்கச் — சொல்லுகின்ற
தூணும் நிலையாம் துலாவாம் வளைமரமாங்
காணுஞ் சலாகை கதவுமாம் — பேணியே
யுப்பிட்டு வைக்க வுகந்த கலமாகும்
பொற்புடைய வேர்க்காலும் பொல்லுமாந் — தப்பாமல்
நட்டா யிரவருட நானிலத்திற் காய்த்துநிற்கும்
பட்டா யிரவருடம் பாழ்போகா — கட்டியுல
காண்டதுரி யோதனரால் காடடைந்து வெம்பசிக்குப்
பாண்டவரு முண்டு பயனடைந்தார் — நீண்டபுகழ்
வீடுமன்பொற் றேரிலணி வெற்றிக் கொடியாகும்
பாடுபுகழ்ச் சேரனுக்கும் பைந்தொடையாம் — நாடுபுகழ்
திங்கட் குடையுடைய சேரனுஞ் செம்பியனுஞ்
சங்கத் தமிழறிந்த பாண்டியனும் — அங்கொருநாட்
பட்டபனந் துண்டமௌவை பாட்டுக் குகந்தளிக்க
இட்டமுட னுண்டதுவு மிப்பழங்காண் — சுட்டாலும்
வித்து முளைக்கும் வியனற் புதப்பனையைப்
புத்தியாய்ப் பேணிப் பொருளடைவர் — தொற்றுபல

நோய்போம் மிடிபோகு நூறுண்டு வாழ்வதற்குக்
காயசித்தி யாகுங் களிப்புண்டா — நேயமுடன்
கற்பகமே யென்றதனைக் கைதொழுது — வேண்டினு
லெப்பொழுது மெப்பொருளு மீயுங்காண் — இப்பனையின்

## நூல் வரலாறு.

மெய்ப்புகழை யாதியிலே தால விலாசமெனச்
செப்பினர் நற்றமிழ்ச்செந் நாப்புலவர் — மற்றதனை
ஆங்கிலத்தில் வேக்குசனென் ரேரறிஞ ஞக்கிவைத்தான்
பாங்கா யதனைப் படியெடுத்து — மீங்கென்து
தந்தையார் கற்று மொழிந்தவற் றிஞ்ஞான்று
சிந்தையி னின்ற சிலகுறிப்பும் — வந்த
உலக வழக்கு முணர்ந்துரைத்தே னேது
கவிவெண்பாட் டாற்கல்வி யில்லேன் — குலவிவரு
குற்றங் களைந்து குணமளைந்து கோதாட்டல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

## வாழ்த்து.

பொன்னின் மழைவாழி பூமி நலம்வாழி
மன்னுயிர்கள் வாழி யறம்வாழி — எந்நாளுங்
கற்பகம்போ லீயுங் கடவுட் பணிவாழி
நற்றமிழும் வாழி நயந்து.

திருச்சிற்றம்பலம்

தாலவிலாசம் முற்றிற்று.

## அநுபந்தம்.

கல்விக் கழகத்துப் பெண்பிள்ளைகள் பாடி யாடுதற்
பொருட்டு இக்கும்மி யெழுதப்பட்டது.

### காப்பு

தென்னிலங் காபுரிச் சென்னியி லேவளர்
தெய்வப் பனையின் சிறப்புரைக்கத்
தன்னிக ரில்லாத முன்னவன் றாமரைத்
தாளிரண் டுஞ்சரண் ஞானப்பெண்ணே 1

### நூல்

சீரா யொருபானை சோற்றுக் கொருசோறு
செம்பதம் பார்ப்பது போற்பனையி
லோரா யிரம்பய னுண்டா மவற்றினு
ளொன்றிரண்டு சொல்வேன் ஞானப்பெண்ணே 2

## பனையின் தோற்றம்.

அன்னையு மப்பனு மாகி யுயிர்களை
    யன்புடன் காக்குங் கடவுளந்நாள்
மன்னுயிர் வாழ்வுறப் பல்வகை யாகிய
    மரங்கள் படைத்தனன் ஞானப்பெண்ணே 3

விண்ணுல கத்தினி லைந்து தருக்களை
    வேண்டும் பொருடர வேபடைத்திம்
மண்ணுல கத்தினிற் றெய்வப் பனையொன்றை
    வள்ள லருளினன் ஞானப்பெண்ணே 4

நட்டா யிரமாண்டு பூமியி லேநின்று
    நல்ல பயன்க ளுதவிடுமாம்
பட்டா யிரமாண்டு பாழடை யாதென்று
    பழமொழி கூறுவர் ஞானப்பெண்ணே 5

## பனையின் பெயர்கள்

கட்டைக் கறுப்பி கருங்குந்தி செங்குந்தி
காகக் கருப்பைச்சி பூமணத்தி
நெட்டைச் சிவப்பி சடைச்சிநாற் கண்ணிச்சி
நீண்ட குலைச்சியாம் ஞானப்பெண்ணே 6

பிள்ளைக்குத் தாய்கொடாப் பெரியவா ழைக்காய்ச்சி
பெற்றிடு மாயிரங் காய்ச்சியுடன்
கொள்ளு நுரைச்சி நரைச்சிநற் றேறைச்சி
கூறுவ ரின்னமு ஞானப்பெண்ணே 7

## பனையுண்டாக்குதல்

கொத்திவெட்டி வேலி கட்டிப் பழுதிலாக்
கொட்டைகளை யேழு சாணுக்கொன்றாய்ப்
பத்தி பத்தியாக மண்ணிற் புதைத்திடப்
பரவி முளைவரும் ஞானப்பெண்ணே 8

மூடு படம்விரித் தாடுபாம் பைப்போல
முளைத்து வளரும் பருவமதில்
ஆடுமாடு தின்று தோம்பி வளர்த்திடில்
ஆண்டுபத் திற்பயன் ஞானப்பெண்ணே 9

பெண்பிளை யும்பனை யும்பரி பக்குவம்
பேணி வளர்த்திடி லாண்டுபத்திற்
பண்புட னேபய னீந்திடு மென்றுமுற்
பாவலர் கூறினர் ஞானப்பெண்ணே 10

பயன்கள்.

உருக்குவா ளேந்திப் பகைசெற் றுலகினை
யோம்பு மணிமுடி மன்னவன்போற்
கருக்குவா ளேந்திக் கலியை யழித்திந்தக்
காசினி யைக்காக்கும் ஞானப்பெண்ணே 11

கங்குமட்டை.

தங்குமட் டாய்வளர்ந் தேசரு காகிப்பின்
றுனே கழன்று சரிந்துவிழுங்
கங்குமட் டைகூடத் தும்பாய் விறகாகிக்
கைப்பொருள் தந்திடும் ஞானப்பெண்ணே 12

ஓலை

வீடுகள் வேய்ந்திட வேலி யடைத்திட
விசிறிகள் செய்யக் குடில்பொதிய
மாடுக ளுக்குண வாகவைக் கான்செய
வள்ளப் பிழாவுமாம் ஞானப்பெண்ணே 13

வார்ந்திட்ட சட்டங்க ளொன்றின்மே லொன்ருக
வைத்தடுக் கிப்பின் வரிந்துசெய்த
தேர்ந்திட்ட மள்ளர் தலைப்பாகை போலெந்தத்
தேசத்தி லேயுண்டு ஞானப்பெண்ணே 14

## ஓலைச் சருகு.

வாரி விளையா வயற்கெரு வாகவே
வற்றற் சருகினைத் தூவிவிட்டால்
வீரிய மாகவே செந்நெல் விளைந்திடும்
வேறும் பயிர்வரும் ஞானப்பெண்ணே 15

## மட்டை.

வலிய கருக்கொடு நாருந் தரும்மட்டை
வரிச்சுக் குதவு நெசவுசெயும்
எலிகளுக் கேற்றி யமுக்கிப் பிடித்திடும்
இடார்ப்பொறி செய்யலாம் ஞானப்பெண்ணே 16

## நார்.

கட்ட வுதவிடுங் கண்ணி கயிற்றுநாற்
காலிகள் கூடைகள் பின்னிடலாம்
மட்டை யுதவிடு நாரினா லின்னமும்
வாய்க்கும் பொருள்பல ஞானப்பெண்ணே 17

ஈர்க்கு.

சட்டிபா னையேறி யாடுமு றிவகை
தக்கவீர் வாணிகள் தட்டுவகை
கொட்டிப் புடைக்குஞ் சுளகிவை யீர்க்கினிற்
குல்லாவுஞ் செய்யலாம் ஞானப்பெண்ணே 18

ஓலைச்சட்டம்

ஐந்து வயதினிற் கையி லெடுக்கின்ற
வரிவரி யேடு முதலாக
முந்து பலகலை யாகம மோலையில்
முன்ன மெழுதினர் ஞானப்பெண்ணே 19

ஓலைச்சார்வு

பன்னத்தா லுண்டாகு மெல்லாப் பொருளையும்
பன்ன முடியுமோ பல்வகையாம்
வன்னப்பெட் டிகூடை பாய்கடக முமல்
மற்று மனந்தமாம் ஞானப்பெண்ணே 20

## ஓலைப்பொல்லு

வட்டமாக வெட்டி நடுவே துளைசெய்து
வளையாத கம்பியிற் கோத்திறுக்கித்
திட்டமா கச்சீவிச் செய்தவோ லைப்பொல்லுத்
தேடக் கிடையாது ஞானப்பெண்ணே 21

## குருத்து

சாற்றும் பனையின் குருத்தினை முற்றமுன்
தானெடுத்து வெட்டி யுண்பவர்க்குப்
போற்றுங் குடரினிற் குத்துங் கிருமிகள்
போயகலு மென்பர் ஞானப்பெண்ணே 22

ஆக்க மளிக்கப் படைத்திட்ட மங்கல
மான பனைபய னீவதற்குக்
காக்கையின் மூக்குப்போற் கார்த்திகை மாதத்திற்
கருக்கொள்ளு மென்றனர் ஞானப்பெண்ணே 23.

பம்பிய பாளை வெளிவந்து பைப்பயப்
பற்றுங் குரும்பைக ளிற்பலவும்
வெம்பி விழுமெடுத் தாவின் பசிகெட
வெட்டிவைத் தால்நன்மை ஞானப்பெண்ணே 24

நுங்கு

மங்கல மாமணப் பந்தரிற் றோரண
வாயிலி லேமகிழ் வாகவைக்கும்
நுங்கின் சுவையினை யுண்டறிவ தன்றி
நுவல முடியுமோ ஞானப்பெண்ணே 25

கண்ட வுடனேவா யூறி யினித்திடுங்
கற்கண்டோ! தேனோ! நறும்பாகோ!
அண்டர்கள் நுங்கினை யுண்டறிந் தால்முன்னே
யமுதங் கடைந்திடார் ஞானப்பெண்ணே 26

### சார்வாய்

சீராக முற்ருத தாலக் கனியினைச்
சீவிப் பருப்பொடு தேங்காயின்பால்
நேராக வுப்பிட் டவித்துண மற்றதை
நிகரான தெங்குண்டு ஞானப்பெண்ணே 27

### பனம்பழம்

திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும்
தென்னவனு மௌவை சொற்படியே
மங்கல மாயுண்ட தெய்வப் பனம்பழம்
மரியாதை யற்றதோ ஞானப்பெண்ணே 28

கைப்புமுப் பும்போக நாலுமொன் ருகவே
கலந்து சுவைக்கும் பனம்பழத்தின்
துய்க்குஞ் சுவைக்கு நிகராக வேறென்றைச்
சொல்ல முடியுமோ ஞானப்பெண்ணே 29

அந்தப் பனைதரும் நல்ல பழத்தினை
யாராய்ந் தெடுத்துத் தழலிட்டே
வெந்த பதத்தினில் நீரிற் கழுவியே
மேற்றோலை நீக்குவர் ஞானப்பெண்ணே 30

கையாற் பிசைந்து கறந்து கறந்து
களியினை வாய்வைத் துறிஞ்சியுண்டாற்
செய்தேன் திரட்சிப்பால் சீனி முதலிய
தித்திப்பென் றுண்ணாரே ஞானப்பெண்ணே 31

வாய்ச்சிட்ட கற்பக தாருவெ னும்பனை
மதுரப் பழத்தினை யாமறந்தே
ஈச்சம் பழத்திற்கு வாயூறிக் கைப்பொருள்
இழக்கின்ற வாறென்ன ஞானப்பெண்ணே 32

பலுட்டு

சுத்தத் தலத்திற் றெடைக்குமே லாகவே
    தோன்றிடப் பந்தர் சமைத்துக்கொண்டே
வைத்த பழங்களைப் பட்டடை யிற்றட்டி
    வாங்கிப் பிசைகுவர் ஞானப்பெண்ணே 33

கூறுஞ் சிறுதடி கூட்டியொன் றுய்க்கட்டிக்
    குந்தைத் துழாவித் துழாவியெடுத்
தூறுங் களியினைச் சல்லாப் புடவையி
    லூற்றி வடிப்பார்கள் ஞானப்பெண்ணே 34

எட்டுநா ளெட்டுக் களியினைப் பாயில்விட்
    டேவெயிற் காயப் பரவியிறை
மட்டதா கத்தடித் துப்பத மாகவே
    வந்தா லெடுப்பார்கள் ஞானப்பெண்ணே 35

உப்பும் பிரண்டையு மொக்கவதிற்றாவி
யொவ்வொரு சாணுக்குச் சாண்கீறித்
தப்பாமற் றட்டை யகப்பையி னுல்மெல்லத்
தட்டா யெடுப்பார்கள் ஞானப்பெண்ணே 36

கூடையி லிட்டு மடித்துப் பரணிலே
கொண்டுவைத் துப்பின்ன ருண்டிடுவார்
பீடை கெடும்பசி போம்மலம் போமின்னும்
பெலனுமுண் டாமென்பர் ஞானப்பெண்ணே 37

உப்புப் புளிமிள காயுட னேவெள்ளை
யுள்ளி மிளகு சமன்கூட்டித்
தப்பாம லம்மியி லிட்டரைத் தேதொட்டுத்
தானுண்டல் நல்லது ஞானப்பெண்ணே 38

செங்கதி ரோன்சுடு மிந்தப் பலகாரம்
செய்துவைத் துத்தின்ன மாட்டாம
லங்கே பிறர்சமைத் திங்கே விடுமவைக்
காசைப்பட் டோமடி ஞானப்பெண்ணே 39

## வேறு பயன்

ஓடியல் கிழங்குபூ ரான்முத லாகிய
வோரா யிரம்பய னுண்டிவற்றை
முடிய வுரைப்பது கூடாதோ ராயிர
முடியுடை யானுக்கும் ஞானப்பெண்ணே 40

## ஊமல்

செல்வர்க்கு மூக்கிடு தூளிடுஞ் செப்பாகும்
சித்த வைத்தியர்க் குக்குடுக்கை
கொல்லர்க்குத் தூராக் குணக்கரி யாமென்று
கூறினு ரூமலை ஞானப்பெண்ணே 41

## கருப்ப நீர்

இளையபாளை தட்டி முட்டிகட்டிச் சுண்ணம்
ஏற்றி யெடுக்கின்ற வின்பநன்னீர்
தளையும் பனங்கட்டி சீனிகற் கண்டுகள்
சமைக்க வுதவுமே ஞானப்பெண்ணே 42

## கள்ளு

அளிக்குஞ் சுரபியின் பாலெனப் பாற்கட
லமுதெனக் குடியர்கள் போற்றுங்கள்ளைப்
புளிக்குமு னுண்டிடிற் பொல்லாப் பிணிபல
போய்விடு மென்றனர் ஞானப்பெண்ணே 43

## பனையைப் பேணல்

எட்டுநூ றுவகை நற்பய னீகின்ற
இன்பப் பனையை மறந்ததனாற்
பட்டுக்கெட் டோமினிப் பாவித்துப் பேணியே
பணமுட்டைத் தீர்க்குவம் ஞானப்பெண்ணே 44

விண்கண்ட தேவரு மாசைப்பட் டேவந்து
வேண்டிநிற் கும்வியன் கற்பகத்தைக்
கண்கண்ட செல்வக் களஞ்சிய நீயென்று
கைதொழ வேண்டுமே ஞானப்பெண்ணே 45

## வாழ்த்து

இல்வாழ்வுக் காகிய எல்லாப் பொருளையு
மெங்களுக் கெப்பொழு துங்கொடுக்க
வல்ல பனையெங்கள் செந்தமிழ் நாட்டிலே
வாழிய வாழிய ஞானப்பெண்ணே 46

கற்பக மேகாம தேனுவே யெங்களைக்
காத்திடுஞ் செல்வக் களஞ்சியமே
அற்புத மேயென்று போற்றுந் திருப்பனை
யனவரத தம்வாழி வாழியவே. 47

416

முற்றிற்று

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 12 | தாணுண்பர் | தானுண்பர் |
| 16 | 1 | செயு | செய்யு |
| 20 | 6 | ரைத்துண்பர் | வைத்துண்பர் |
| 24 | 4 | றினவடையிற் | றினவடைவிற் |
| 27 | 2 | ருளளும் | ருள்ளும் |
| 44 | 7 | புடவை | புடைவை |
| 48 | 6 | கெப்பொ | கெப்பொழு |

ஓம்

ஒரே செலவில் தமக்கும் பிறர்க்கும் நயம் வர
வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா!
நாடு நலம்பெற, நாம் நற்சேவை செய்ய, எமது
உற்பத்திப் பொருட்களை வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்

அதிபர்,

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12

தொலைபேசி: 36063

மில்க்வைற் சவர்க்கார மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வருகின்றோம்.
சேகரித்துக் கொடுத்து அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.